



# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

**மானியக் கோரிக்கை எண் - 26**

## அறிவிப்புகள்

## 2022-2023

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்

**மானியக் கோரிக்கை எண் - 26**

## அறிவிப்புகள்
## 2022-2023

**தா.மோ.அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 10 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**தா.மோ.அன்பரசன்**
**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**

**1. நடப்பு நிதியாண்டில் நில உரிமையுள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற பயனாளிகளுக்கு, தாமாகவே வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் தனி வீடுகள் கட்டப்படும்.**

நில உரிமையுள்ள, பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு தாமாக வீடு கட்டிக் கொள்ள ரூ.2.10 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சென்னை, இதர மாநகரங்கள், நகரங்கள் மற்றும் பேரூராட்சிகளில் தனி வீடுகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2022-23 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்படி ஒரு இலட்சம் தனி வீடுகள் புதிதாகக் கட்டப்படும்.

**2. நகர்ப்புரங்களில் வாழும் பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இந்த நிதியாண்டில் 25,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நகர்ப்புர ஏழை மக்களுக்காக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு தகுதியான நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப் படுகின்றன.

2022-23ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் 25,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்



**3.மக்கள் வாழ்வதற்கு தகுதியற்ற சிதிலமடைந்த 7,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1200 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்த ஆண்டு மறுகட்டுமானம் செய்யப்படும்.**

நீண்ட கால பயன்பாடு, தட்ப வெட்ப மாறுபாட்டின் காரணமாக சிதிலமடைந்த குடியிருப்புகள் அங்கு வாழும் குடும்பங்களின் உயிர் மற்றும் உடமைகளுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் நிலையில் உள்ளன. எனவே, அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் ஆய்வு அடிப்படையில் இவை மறுகட்டுமானம் செய்யப்படுகின்றன.

இந்த நிதியாண்டில் சென்னை மாநகரில் சிதிலமடைந்த 7,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு ரூ.1200 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**4.குடியிருப்பு திட்டப் பகுதிகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் நல்ல முறையில் பேணிக்காத்திட கொண்டு வரப்பட்ட "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டத்தினை திறம்பட செயல்படுத்த குடியிருப்போர் நலச்சங்கங்கள் பதிவு செய்வதற்கு செலுத்த வேண்டிய பதிவு கட்டணத்திற்கு விலக்கு அளிக்கப்படும்.**

"நம் குடியிருப்பு நம் பொறுப்பு" என்ற திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டு குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக்குடியிருப்போர் நலச் சங்கங்கள் கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது. குடியிருப்போர் நலச் சங்கங்களை ஊக்கப்படுத்தும் வகையில் செலுத்த வேண்டிய பதிவு கட்டணத்திற்கு விலக்கு அளிக்கப்படும்.



**5.குடியிருப்புதாரர்கள் உடனடியாக பராமரிப்புக் கட்டணம் செலுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மூன்று மாத பராமரிப்புத் தொகை அரசு பங்களிப்பு நிதியிலிருந்து முன்பணமாக செலுத்தப்படும்.**

"நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பணிகளை உடனுக்குடன் பழுது நீக்கி நல்ல முறையில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள குடியிருப்புதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பராமரிப்புத் தொகைக்கு ஈடாக அரசினால் மானியத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதன் தொடக்கமாக மூன்று மாத பராமரிப்புத் தொகை அரசு பங்களிப்பு நிதியிலிருந்து ஒரே தவணையில் முன்பணமாக வழங்கப்படும்.

## 6. அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்புப் பணியினை திறம்பட செயல்படுத்திட தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் தனி பராமரிப்புப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் சுகாதாரத்தினை பேணுதல், குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றும் பணிகள், மின்தூக்கி, மின்ஆக்கிகளை பராமரித்தல், அடுக்குமாடிக் குடியிருப்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட குப்பைகள் அகற்றுவதை கண்காணித்தல் போன்ற பணிகளை நிறைவேற்ற வாரியத்தில் தனி பராமரிப்புப் பிரிவு ஏற்படுத்தப்படும்.



## 7. சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள 40,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்த நிதியாண்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை மற்றும் இதர நகரங்களில் கட்டி முடிக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்த குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகளுக்கு உரிய நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் அவை மிகவும் பழுதடைந்துள்ளன. இந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் முழுமையாக பழுது நீக்கவும், வண்ணம் பூசி தோற்றப் பொலிவினை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.குடியிருப்புதாரர்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மாதாந்திர தவணைத் தொகையினை இணையதள செயலி மூலம் குறித்த காலத்திற்குள் சுலபமாக செலுத்த வழிவகை செய்யப்படும்.

வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான மேம்பாட்டுக் கட்டணம் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான தவணைத் தொகைகள் பண வசூலாளர்களைக் கொண்டு வசூலிக்கப்படுகின்றன.

இந்த நிதியாண்டில் குடியிருப்புதாரர்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மாதாந்திர தவணைத் தொகையினை இணையதள செயலி மூலம் குறித்த காலத்திற்குள் சுலபமாக செலுத்த வழிவகை செய்யப்படும்.



## 9.பயனாளிகள் திறன் மற்றும் விருப்பத்திற்கேற்ப தேர்வு செய்யும் வகையில் பல்வேறு தரைப்பரப்பளவு கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் திறனுக்கேற்ற வீட்டுவசதியினை அதிகப்படுத்தும் வகையில் பல்வேறு அளவுகள் கொண்ட புதிய மாதிரி வீட்டுவசதி திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் கட்டடப் பரப்பினை அடிப்படையாகக் கொண்டு பயனாளிகளின் பங்களிப்புத் தொகை நிர்ணயிக்கப்படும். பயனாளிகள் தங்கள் விருப்பம், வாங்கும் திறனுக்கேற்ற கட்டட பரப்பளவுள்ள குடியிருப்புகளை தேர்ந்தெடுக்கலாம்.

**10. அரசு மற்றும் அரசுத்துறை வீட்டுவசதி நிறுவனங்கள், தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் முக்கிய கொள்கை முடிவுகள் மற்றும் முதலீடு குறித்த முடிவுகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, வீட்டுவசதித் துறை குறித்த மேம்படுத்தப்பட்ட தகவல்களை அளிக்க தமிழ்நாடு ஒருங்கிணைந்த தகவல் அமைப்பு ஏற்படுத்தப்படும்.**

வீட்டுவசதித் தேவை, இருப்பு, நிதி ஆதாரங்கள், வீட்டுவசதி சந்தையின் செயல்திறன், முதலீடுகள் மற்றும் கொள்கை முடிவெடுக்க ஏதுவான வழிமுறைகள் குறித்த தகவல்களைக் கொண்ட தளமாக ஒருங்கிணைந்த தமிழ்நாடு வீட்டுவசதி தகவல் அமைப்பு (Tamil Nadu Integrated Housing Information System - TNIHIS) இயங்கும்.